**சார்பு நீதிமன்றம், இராஜபாளையம்**

அசல் வழக்கு எண்.29/2025 நாள்- 23.07.2025

**வா.சா.1- முத்துச்சாமி**

**வா.சா.1-ன் குறுக்குவிசாரணை பிரதிவாதி தரப்பில்**

நான் கிராம நிர்வாக அலுவலராக இருந்து ஓய்வு பெற்றுவிட்டேன் என்றால் சரிதான். அதனால் இந்த வழக்கின் சொத்து விவரம், என் அப்பாவின் சொத்து விவரம் மற்றும் நானும், என் சகோதரரும் கிரையம் பெற்ற சொத்து விவரம் பற்றி எனக்கு தெரியும். தற்போது எனக்கு பார்வை மங்கலாக உள்ளதால் ஆவணங்களை படித்துபார்க்க இயலாது. 1ம் பிரதிவாதிஎன் உடன் பிறந்த சகோதரர், 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதியின் மனைவி. 3ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதியின் மகன் என்றால் சரிதான். 2ம் வாதி என் மகன். எனக்கு முன்பு முதல் திருமணம் நடைபெற்று முதல் மனைவியின் மூலமாக இரண்டு பெண் குழந்தைகள் உண்டு முதல் மனைவியை நான் விவாகரத்து செய்துவிட்டேன். வழக்கின் சொத்து கதவு எண்.136 யை நான்2ம் வாதிக்கு தான செட்டில்மெண்டாக எழுதிக் கொடுத்துவிட்டேன் என்றால் சரிதான். ஆனால் வழக்கின் சொத்தை நான் தான் அனுபவம் செய்து வருகிறேன் என்று கேட்டால் என் மகனுக்கு திருமணமாகததால் நானும் என் மகனும் ஒன்றாக தான்குடியிரந்து வருகிறோம். தாவா சொத்து என் அப்பா பெரியசாமிக்கு பூர்விகமாய் பாத்தியப்பட்ட சொத்து என்றால்சரிதான். என் அப்பாவிற்கு பாத்தியப்பட்ட கதவு எண்.136 தவிர கதவு எண்.47 ல் கண்ட வீடும் விவசாய நிலமும் இருக்கிறது என்றால் சரிதான். என் உடன் பிறந்தவர்கள் என்னுடன் சேர்ந்து 3 ஆண், 1 பெண். நான் என் அப்பாவிற்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை நாங்கள் வாய்ெ மாழியாக பாகம் பிரித்துக் கொண்டோம். அந்த வாய்மொழி பாகத்தின் படி கிடைத்த சொத்துக்களை அந்தந்த தரப்பினர்கள் பட்டா மாற்றி அனுபவம் செய்து வருகிறோம் என்றால் சரிதான். வழக்கின் சொத்து கதவு எண்.136 எனக்கும் 1ம் பிரதிவாதிகு கதவு எண்136/1ம் உள்ளவீடு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். கதவு எண்.47 ல் எனக்கு ஒருவீடும் என் சகோதரர் சின்னச்சாமிக்கு ஒருவீடும் ஒதுக்கினார்கள். கதவு எண்.47 ல் சின்னச்சாமி ஒதுக்கப்பட்ட வீட்டில் எனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் அவருக்கு கதவு எண்.47A யும், எனக்கு கதவு எண்.47 B யும் ஒதுக்கப்பட்டது. நகராட்சி வருவாய் ஆவணங்களில் கதவு எண்.47B என்று தான் உள்ளது கதவு எண்.47A என்று இல்லை என்றால் எனக்கு தெரியாது. கதவு எண்.47 ல்

சின்னச்சாமிக்கு ஒதுக்கப்பட்ட வீட்டில் எனக்கு ஆட்சேபணை உண்டா என்று கேட்டால் பத்திரத்தின் படியும் பட்டாவின் படியும் எனக்கு பாத்தியப்பட்ட சொத்து பிரதிவாதியின் சொத்திற்குள் இருப்பதால் ஆட்சேபணை உண்டு. கதவு எண்.47 ல் கண்ட வீடு என் அப்பா கட்டிய வீடு. எங்களுக்குள் வாய் மொழி பாகம் எப்போது ஏற்பட்டது என்று கேட்டால் 1991 ம் ஆண்டு வாய்மொழி பாகம் ஏற்பட்டது. 1991 முதல் இன்றுவரை கதவு எண்.47 ல் உள்ள ஒருவீட்டை நானும், மற்றொரு வீட்டை பிரதிவாதியும் அனுபவம் செய்து வருகிறோம் என்றால் சரிதான். பட்டா மற்றும் பத்திரத்தின்படி என்னுடைய சொத்து பிரதிவாதியின் சொத்திற்குள் இருக்கிறது என்று நகராட்சியில் மனு கொடுக்கவில்லை. நீதிமன்றத்தில் வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் எதிர்கோரிக்கை கேட்டுள்ளேன். என் சகோதரர் சின்னச்சாமியும், நானும் வாங்கிய சொத்தைப் பொறுத்து மட்டும் பாகம் செய்ய வேண்டும் என்று அ.வ.எண்.243/2024 வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் நான் எதிர்கோரிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அ.வ.எண்.243/2024 வழக்கில் எதிர்உரையுடன் கூடிய எதிர்கோரிக்கை மற்றும் வழக்குரை பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் வேண்டுமென்றே அவஎண்.243/2024 வழக்கு சங்கதிகளை மறைத்து இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.எ ன் உடன்பிறந்த சகோதர் மற்றும் சகோதரிகளை இந்த வழக்கிற்கு அவசியமான தரப்பினர் என்றும், அவர்களை சேர்க்காமல் நான் கோரும்பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல. வழக்கின் சொத்துக்களும் பிற சொத்துக்களும் எங்களுக்குள் பாகம் பிரிக்கப்படவில்லை என்றும், வாய்மொழி பாகம் ஏற்படடதாக வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றும், பாகம் பிரிக்காத சொத்துக்களை பொறுத்து கூட்டு உரிமையாளருக்கு எதிராக நிரந்த உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரமுடியாது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் வீடு கட்ட முயற்சி செய்ய போது பிரதிவாதிகள் தடுத்ததாக இராஜபாளையம் வடக்கு காவல்நிலையத்தில் நான் புகார் கொடுத்தேன் அந்த புகார் சம்பந்தமாக காவலர்கள் என்னை விசாரித்தபோது பிரதிவாதி தரப்பில் கதவு எண்.47 ல் கண்ட சொத்தில் பிரதிவாதிகள் வீடு கட்டுவதை தடுக்கக்கூடாது என்றும்,தடுத்ததால் 136 ல் நான்வீடு கட்டுவதை தடுக்கிறேன் என்று கூறினார்களா என்று கேட்டால் கூறினார்கள். நான் இந்த தாவா சொத்ததை அடைய வேண்டும என்பதற்காக பிரதிவாதிகள் வீடு கட்டுவதை தடுத்தேதன் என்றும் , அதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அவஎண்.243/2024 வழக்கில் கூட்டுஉரிமையாளர் என்று ஒப்புக் கொண்டுவிட்டு தற்போது

கூட்டுஉரிமையாளருக்கு எதிராக உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்பது சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. கதவு எண்.47 ல் கண்ட வீட்டில் பிரதிவாதிகள் வீடு கட்ட முயற்சி செய்த போது நான் தடுத்தேன் என்றால் என்னுடைய சொத்தில் வீடு கட்ட முயற்சி செய்ததால் தடுத்தேன். பிரதிவாதிகள் தரப்பில் கேவியட் மனு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். நான் கேட்கும் பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியதல்ல என்றும், வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,
இராஜபாளையம்.